பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத வூ தை மீ 09 உ செவ்வாய்க்கிழமை (22-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 56

# வல்வையில் நேற்றும் குண்டுவீச்சு அகோரம்!

## அழிப்பு வேலை தொடர்கிறது

நெல்லியடி, ஜனவரி 22

வல்வெட்டித்துறையில் பொதுமக்கள் குடியிருப்புகளை நிர்மூல மாக்கும் விதத்தில் அரசுப் படைகளின் பெரும் விமானக் குண்டு வீச்சு நடவடிக்கைகள் தொடர்ந்து நேற்று இரண்டாம் நாளாக — நாள் முழுவதும் — இடம்பெற்றன.

நேற்றும் எண்ணிக்கை குறிப்பிட முடியாதளவுக்கு குண்டுகள் அடுத்தடுத்து வல்வெட்டித்துறை முதல் ஊரிக்காடு வரையான பகுதிகளில் வீசப்பட்டன.

இதனால் வீடுகள், கடைகள், கோவில்கள் சந்தை உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்தன.

நேற்று நான்கு தடவைகளுக்கும் அதிகமாக தாக்குதல்கள் நடந்தன.

காலை 6.30 மணி முதல் ஒரு மணி நேரம் 2 அவ்ரோ, ஒரு சீனச் சகடை ஆகியவையும் —

காலை 9 மணி முதல் 10 மணி வரை ஒரு அவ்ரோ, ஒரு ஹெலி ஆகியவையும்—

காலை 10.30 மணி முதல் 3 பொம்மர்கள், ஒரு அவ்ரோ ஆகியவை சுமார் அரை மணி நேரமும்—

பின்னர் 3 பொம்மர்கள், ஒரு அவ்ரோ, ஒரு ஹெலி ஆகியவை நண்பகல் 12.30 மணி முதல் 2-30 மணி வரையும் தாக்குதல் நடத்தின.

இந்தத் தாக்குதல்களினால்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சித்திரவதை

யாழ்ப்பாணம், ஜன. 22

நேற்று முந்தினம் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் இருந்து வெளியேறிய படையினர் அம்பலாந்துறையைச் சேர்ந்த திருமணமான சின்னத்தம்பி புவனம் (வயது 40) என்ற பெண்ணைப் பிடித்து அடித்து சித்திரவதை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## துணுக்காயிலும் பெரும் குண்டு வீச்சு!

### 30வீடுகள், 10கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜன. 22

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் பெரும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

மூன்று பொம்மர்கள், மூன்று அவ்ரோ விமானங்கள், சீனச் சகடை விமானம் ஒன்று, ஒரு சீ-பிளேன், இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ஆகியவை இந்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இப் பகுதியில் 30க்கும் அதிகமான வீடுகள், 10க்கும் அதிகமான கடைகள் என்பன சேதமடைந்தன.

துணுக்காய்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மல்லாவியில் வைத்தியர் விடுதி, கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவை உட்பட மேலும் பல கட்டடங்கள் சேதமடைந்தன.

உயிரிழப்புகள் குறித்து மேல் விவரங்கள் கிடைக்கவில்லை. (உ)

## வலி. வடக்குப் பகுதியில் நேற்றும் வான் தாக்கு!

காங்கேசன்துறை, ஜன. 22

வலி, வடக்குப் பகுதியில் நேற்றும் பொம்மர்கள், அவ்ரோ என்பன மாறி மாறி குண்டுகளை வீசித் தாக்கின. ஹெலியும் றொக்கட் மற்றும் சுவீபர் தாக்குதல்களை நடத்தியது.

பலாலி, கட்டுவன், மாவிட்டபுரம், வீமன்காமம், குப்பிளான், கீரிமலைப்பகுதிகளில் குண்டுகள் போடப்பட்டன. இப்பகுதிகளில் பல வீடுகள் தரைமட்டமாகி இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

நேற்று முன்தினம் இரவு பலாலி முகாமில் இருந்து அடுத்தடுத்து ஷெல்கள் ஏவப்பட்டன. தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகங்களும் நடத்தப்பட்டன.

ஷெல் வீச்சை அடுத்து வளலாய், இடைக்காடு பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறினர். (ஓ-15-68)

## சிறுப்பிட்டியில் நள்ளிரவு 'அவ்ரோ' குண்டு வீச்சு!

### நால்வர் காயம்; வீடு நாசம்

நீர்வேலி, சிறுப்பிட்டி கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 10.30 மணியளவில் 'அவ்ரோ' விமானத்திலிருந்து வீசப்பட்ட பாரிய பீப்பாய்க் குண்டினால் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நால்வர் காயமுற்றனர். ஒரு வீடு முற்றாகச் சேதமுற்றது.

பீப்பாய்க் குண்டு விழுந்த இடத்தில் பத்து அடி ஆழத்துக்கு கிணறு போன்ற பாரிய குழி ஏற்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளரான கணபதிப்பிள்ளை சதாசிவத்தின் மனைவி செல்லம்மா (வயது 40), அவரது மகள் ஜெயச்செல்வி (வயது 13), சதாசிவத்தின் சகோதரியான குகதாஸன் நிர்மலாதேவி (வயது 29), அவரது மூன்று வயதுக் குழந்தை கு. வசந்தன் ஆகியோர் இச் சம்பவத்தில் காயமுற்றனர். இவர்கள் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-15-6)

## ஹெலியும் வேட்டு

யாழ்ப்பாணம், ஜன. 22

சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று ஹெலியும் தாக்குதல்களை நடத்தியது. இதனால் வீடுகள் சேதமடைந்தன. சிலர் காயமடைந்தனர்.

காயமுற்ற நடராசா ஜெயந்தினி (20 வயது) என்ற இளம் பெண் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-15)

## புத்தூரில் இருவர் காயம்

புத்தூர் கிழக்கில் நேற்றுக் காலை 9 30 மணியளவில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்.

குடியிருப்புப் பகுதி மீது திடீரென ஹெலியில் இருந்து கிரனேட்டும் வீசப்பட்டது. இதில் இளம் பெண்ணான ஆனந்தராசா சசிகலா (19 வயது), கந்தசாமி நகுலேஸ்வரன் (5 வயது) ஆகியோர் காயமுற்றனர். மாடுகள், ஆடுகள் சிலவும் பலியாகின.

காயமடைந்த இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ-15-6)

## சாவகச்சேரியில் ஹெலி பரவலாக தாக்குதல்

சாவகச்சேரி, ஜன 22

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று பரவலாக ஹெலி தாக்குதல்களை நடத்தியது.

ரயில் நிலைய வீதியில் நின்ற லொறியை நோக்கி றொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எனினும் குறி தவறியதால் லொறி தப்பியது.

சந்தைப் பகுதியை வட்ட

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உலகின் கவனம் அங்கே!

### நிலையை சாதகமாக்கி வடக்கில் தாக்குதல்கள்

உலகின் கவனம் முழுக்க வளைகுடா பக்கம் திரும்பி இருப்பதைச் சாதகமாகப் பயன்படுத்தி வட பகுதியில், மக்கள் மிகவும் நெரிசலாக வாழும் பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசாங்கம் மோசமான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

—இவ்வாறு பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஓ-6)

## விடுப்புப் பார்க்கும் மக்களால் நெருக்கடி

கொக்குவில், ஜன. 22

நேற்று மாலை கொக்குவில் சந்திப் பகுதியில் விமானத் தாக்குதல் நடந்து முடிந்த கையோடு அப்பகுதியில் ஏராளமானோர் விடுப்புப் பார்க்கத் திரண்டதால் காயமடைந்தவர்களை எடுத்துச் செல்வதில் கஷ்டநிலை ஏற்பட்டது. போக்குவரத்தும் தடைப்பட்டது.

சற்று நேரத்தில் அப்பகுதி மீது ஹெலி ஒன்று வட்டமிடத் தொடங்கியதும் விடுப்புப் பார்க்கக் கூடியவர்கள் சிதறி ஓடினர். இதனால் பலர் சிறிய விபத்துகளுக்கு இலக்காகினர்.

அந்த ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம் வீசப்பட்டது. (உ-6-69)

## முச்சந்தி முரளி



அமைக போர் நிறுத்தம் கேட்கிறவர் இங்கை போர் முறையில்லை ... [illegible] நாரா ...!

## அங்கு யுத்தநிறுத்தம் கேட்கிறார் பிரேமா!

கொழும்பு, ஜன. 22

வளைகுடா போரில் எவரும் வெற்றி அடைய முடியாது என்று ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளைகுடாப் போரில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர முயற்சிக்கும் படி அணிசேரா இயக்கத்தைத் தான் கோரியிருப்பதாகவும் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மற்றும் விட்டுக்கொடுத்தல் மூலமே வளைகுடா நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உளவியல் யுத்தத்தை முறியடிக்க அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

"சிங்கள அரசின் உளவியல் யுத்தத்தை முறியடிப்போம்" என்ற தலைப்பில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

எமது விடுதலைப் போராட்டம் பெரிய வளர்ச்சி அடைந்துள்ள இன்றைய நிலையில் எதிரி எம் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு பல வழிமுறைகளை மேற்கொள்கின்றான்.

அதில் ஒன்று தான் தற்போது நடைபெறும் குண்டு வீச்சுகள்.

ஆயுதப்போராட்டத்தில் முழு நம்பிக்கை வைத்துப் போராடும் எமது இயக்கத்திற்கு முழு உற்சாகம் தந்துகொண்டிருக்கும் எமது மக்களின் மனங்களை விழுத்துவதற்காக எதிரி தொடுக்கும் போர் உபாயம் தான் இந்தக் குண்டு வீச்சு.

எமது மக்களை அவர்களது சொந்த இருப்பிடங்களில் இருந்து விரட்டிவிட்டு, பொருளாதாரச் சிக்கலை உண்டு பண்ணி, அநாதரவான ஒரு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் குண்டு வீச்சில் வயோதிபர் பலி! பலர் காயம்!!

கொக்குவில், ஜன. 22

கொக்குவில் சந்தியிலும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் நேற்று மாலை 5 மணியளவில் 4 பொம்மர்கள் அடுத்தடுத்து குண்டுகளை வீசின. சுமார் 30 நிமிடங்கள் ஏழுக்கு மேற்பட்ட குண்டுகளும், றொக்கட்டுகளும் மாறி மாறி வீசப்பட்டன.

குண்டு வீச்சில் ஒருவர் உயிரிழந்தார். எழுவர் காயமடைந்தனர். இரு வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. பத்துக்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள் சேதங்களுக்கு இலக்காகின.

கொக்குவில் சந்திக்குச் சமீபமாக கே. கே. எஸ். வீதியை அண்டிய பகுதியிலேயே அதிகமான குண்டுகள் விழுந்தன. இப்பகுதியில் பெருமளவு சேதம் ஏற்பட்டது.

ஏனைய குண்டுகள் புதுக்கோவில் ஆலய வெளி வீதியிலும், மஞ்சவனப்பதி முருகன் ஆலய வெளி வீதியிலும் விழுந்து வெடித்தன.

குண்டு வீச்சில் உயிரிழந்தவர் கொக்குவிலைச் சேர்ந்த முத்தையா மகாதேவா (62 வயது) என்பவர் ஆவார். இவர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய முன்னாள் அதிபர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியையான மீசாலை

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தொடரும் யுத்தம்

வளைகுடா யுத்தம் தொடங்கி ஐந்து நாட்கள் கழிந்துவிட்டன.

யுத்தம் ஐந்து அல்லது ஆறு தினங்களில் முடிவடைந்து விடும் என்று யுத்தம் ஆரம்பமாக முன்னர் பிரிட்டிஷ் கணிப்பு ஒன்று தெரிவித்திருந்தது. ஆனால் தற்போதைய நிலை தொடருமானால் யுத்தம் சில மாதங்களும் நீடிக்கலாம் என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். உலகம் சமாதானத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இது ஒரு துரதிர்ஷ்ட நிகழ்வே.

1950 களில் ஏற்பட்ட கொரிய யுத்தம், 1956 இல் ஏற்பட்ட சூயஸ் யுத்தம் ஆகியவற்றுக்குப் பின்னர் பன்னாட்டுப் படைகள் ஈடுபடும் பெரிய யுத்தம் இதுவாகும். அத்துடன் இனி உலகில் நடக்கப்போகும் யுத்தங்கள் எப்படி இருக்கும் என்பதற்கும் இந்த யுத்தம் ஓர் ஆரம்ப சமிக்ஞையாகவும் கருதப்படுகிறது.

1980 ஆம் ஆண்டு ஆரம்பமான ஈரானுடனான எட்டு வருட கால யுத்தம் மூலம் ஈராக் தனது இராணுவ பலத்தை கட்டி எழுப்பியது. மத்திய கிழக்கில் தற்போது ஒரு பலம் வாய்ந்த நாடாக அது உருவெடுத்து வருகிறது.

மூன்று யுத்தங்களை நடத்தியும் இஸ்ரவேலைத் தோற்கடிக்க முடியாத நிலையில் அரபு நாடுகளில் வகித்து வந்த தலைமைப் பதவியை 1973 அக்டோபர் மத்திய கிழக்கு யுத்தத்தின் பின்னர் எகிப்து இழந்தது. இந்த தலைமைப் பதவி மற்றொரு அரபு நாடான ஈராக்கிடம் சென்று கொண்டிருப்பது வெளிப்படை.

இதனால் தான், ஈராக்கிடம் தலைமைப் பதவி செல்வதை விரும்பாத அரபு நாடுகள் பலவற்றை தற்போதைய நெருக்கடியைப் பயன்படுத்தி அமெரிக்காவினால் இலகுவாக வளைத்துப் பிடிக்க முடிந்தது.

அத்துடன் குவைத்துக்கு நடந்தது தமக்கும் நடக்கலாம் என்ற அரபு நாடுகள் பலவற்றின் அச்சமும் அமெரிக்காவுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

இந்த யுத்தத்தில் அமெரிக்காவினதும் அதன் தோழமை நாடுகளினதும் முக்கிய குறிக்கோள் ஈராக்கின் இராணுவ வல்லமையை அழிப்பதே. இதற்கு குவைத் பிரச்சினை ஒரு வாய்ப்பை அளித்துவிட்டது எனலாம்.

குவைத்தின் அளப்பரிய எண்ணெய் வளம், இஸ்ரவேலை ஒழித்துக் கட்டக் கூடிய விதத்தில் ஈராக் பெற்று வந்த இராணுவ பலம் ஆகியனவையே ஈராக்கிற்கு எதிரான இராணுவ நடவடிக்கையைத் துரிதப்படுத்த அமெரிக்காவுக்கு தூண்டுகோலாக அமைந்தன.

இஸ்ரவேல் மீது தாக்குதலை நடத்தி இஸ்ரவேலை யுத்தத்துக்குள் இழுப்பது மூலம் வளைகுடா யுத்தத்தை திசைதிருப்ப சதாம் ஹுசேன் முயலுகிறார். இஸ்ரவேலுடன் யுத்தத்தை ஆரம்பிப்பது மூலம் தற்போது அமெரிக்காவுடன் நிற்கும் அரபு நாடுகள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணலாம் என்றும் அவர் கருதுகிறார்.

ஆகவே வளைகுடா நெருக்கடி விரிவுபடுவதைத் தடுப்பதற்கு உடனடி யுத்த நிறுத்தம் அவசியமாகும்.

யதார்த்த நிலையை மனதிற்கொண்டு இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு இணங்கி வருவது மூலம் பெரும் அழிவில் இருந்து உலகை மீட்கலாம்.

# இன்சுலின் மருந்து இல்லாததால் நீரிழிவு நோயாளர்கள் அவதி

## மந்திகையில் கிளினிக் மூடப்பட்டது

பருத்தித்துறை, ஜன. 22

மந்திகை வைத்தியசாலையில் "இன்சுலின்" மருந்து இல்லாமையினால் பிரதி சனி தோறும் நடைபெறும் கிளினிக்குகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் நீரிழிவு நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட குளிசை வகைகளும் வைத்தியசாலையில் முடிவடைந்து விட்டன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியம் சமீபத்தில் கப்பல் மூலம் அனுப்பப்பட்ட "சனிற்றரி" ரவல்ஸ் போன்ற பொருள்களால் நிரப்பப்பட்டுள்ளது. அவசரதேவையான மருந்துவகைகள் அங்கு கிடையாது.

வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களை வெளிச் சந்தையில் குளிசை வகைகளை வாங்குமாறு ஆலோசனை கூறப்படுகிறது. வெளிச்சந்தையில் மூன்று நான்கு மடங்கு விலை அதிகரித்தே குளிசைகள் விற்கப்படுகின்றன.

இங்குள்ள செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் கப்பல் மூலம் எடுத்துவரும் மருந்துப் பொருள்கள் தேவையானவையா எனப் பரிசீலனை செய்ய வேண்டும். முக்கிய அவசர மருந்துப் பொருள்கள் இல்லாமல் வைத்தியசாலையை எவ்வாறு நடத்துவது?

இப்படி வைத்தியர்கள் அங்கலாய்க்கின்றனர். [இ-118]

# புலிகளின் யுத்த நிறுத்த அழைப்பை நழுவவிடக் கூடாது

## இந்தியத் தூதுவர் பேட்டி

கொழும்பு, ஜன 22

விடுதலைப் புலிகள் இக்கம் அறிவித்து உள்ள ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த அழைப்பை நழுவவிட்டுவிடாது, இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா கொழும்பில் வெளியாகும் வாரப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு கூறியிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான எதிர்காலப் பேச்சுகளுக்கு 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை அடிப்படைக் கட்டமைப்பாக அமைய உதவும் என்றும் திரு. ஜா கூறினார்.

உத்தேச நட்புறவு ஒப்பந்தம் பற்றி விவாதிக்க இந்தியா தயாராக உள்ளதாகவும் —

வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லாவின் கொழும்பு விஜயத்தின்போது இலங்கை அரச அதிகாரிகளுடன் இது தொடர்பாக விவாதம் இடம்பெறக்கூடும் என்றும் திரு. ஜா பேட்டியில் கூறினார்.

## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

நாடாளுமன்றம் இன்று (செவ்வாய்) காலை 9 மணிக்கு கூடுகிறது. மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## திருட்டு

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் அடிக்கடி திருட்டுக்கள் இடம்பெறுகின்றன. (இ-78)

# செயற்கைமுறைசினைப்படுத்தல் வேலை மீண்டும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜன. 22

அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கால்நடைகளுக்கான செயற்கைமுறை சினைப்படுத்தல் வேலைகள் எரிபொருள் தட்டுப்பாட்டினால் மீண்டும் தடைப்பட்டுள்ளன.

செயற்கை முறை சினைப்படுத்தல் நிலைய பொறுப்பதிகாரி இதனைத் தெரிவித்தார்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளை அடுத்து பல மாதங்களாக மேற்படி செயற்பாடு தடைப்பட்டிருந்தன.

பின்னர் அரச அதிபருடன் தொடர்பு கொண்டு பல தடவைகள் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. பின்னர் அண்மையில் நல்லூர் ப.நோ.கூ. சங்கம் ஊடாக எரிபொருள் வழங்கப்பட்டது.

இப்படி வழங்கப்பட்ட எரிபொருளும் முடிந்து விட்ட நிலையில் மீண்டும் செயற்கை முறை சினைப்படுத்தல் வேலைகள் தடைப்பட்டுள்ளன. (இ-6)

# வெலிக்கடையில்தடியடி; சிறைக் கைதி மரணம்!

கொழும்பு, ஜன. 22

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜே. வி. பி. சந்தேக நபர்கள் ரகளை செய்தபோது சிறைக்காவலர்கள் நடத்திய தடியடிப் பிரயோகத்தில் சந்தேக நபர் ஒருவர் மரணமானார்.

அணிவகுப்புக்கென கடந்த வியாழக்கிழமை சில சந்தேக நபர்களை சிறைக்கூடத்துக்கு வெளியே கொண்டு சென்றபோதே அவர்கள் சிறைக் காவலர் ஒருவர்மீது கற்களை வீசி ரகளை புரிந்தனராம்.

அதனை அடுத்து சிறைக் காவலர்கள் மேற்கொண்ட தடியடிப் பிரயோகத்தின் போது சந்தேக நபர் ஒருவர் மரணமானார். 23 பேர் காயமடைந்தனர். (இ-51)

# ஈழப் போராளிகள் விவகாரம்; தி. மு. க. மீது பழிபோடுவது சரியல்ல

## 'இந்து' நாளிதழ் தலையங்கம்

புதுடில்லி, ஜன. 22

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தமிழகத்தில் நடமாடுவது பற்றிக் கூறப்படும் விவகாரங்களுக்கு தி.மு.க. அரசு மீது பழி சுமத்துவது சரியல்ல. ஈழப்போராளிகளை தி. மு. க அரசு ஒருபோதும் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரவில்லை.

அண்மையில் வெளியான "இந்து" நாளிதழின் ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர் தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு;

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தமிழகத்தில இருக்கின்றனர் என்பது குறித்து காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டுவது தார்மீக ரீதியில முரணானதும் ஆத்திரமூட்டுவதுமாகும்.

தற்போதைய தமிழ்நாடு அரசு இருப்பதால்தான் தமிழகத்திற்கு இலங்கைத் தமிழ்ப் போராளிகள் இப்போது வரவில்லை.

1983ல் இலங்கையில் இனக்கலவரம் ஆரம்பமான பின்னர்தான் இலங்கையில் இருந்து அகதிகளும் போராளிகளும் வரத்தொடங்கினார்கள்.

அப்போது புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் அரசும், மாநிலத்தில் அ. தி. மு. க. அரசும் இருந்தன.

போராளிகளினால் ஏற்படும் சட்டம்—ஒழுங்குப்பிரச்சினை குறித்து தற்போதைய மாநில அரசு கண்டும் காணாததுமாக இருக்கக் கூடாது என்பது சரிதான். ஆனால் நிச்சயமாக தி. மு. க. அரசு இலங்கைப்போராளிகளை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரவில்லை.

1983க்குப் பின்னர் இருந்த புதுடில்லிஅரசு கடைப்பிடித்த இ[illegible]தான் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் இன்று தங்கி இருக்கும் நிலை உருவானது.

போராளிகள் தமிழகத்தில் இருப்பினும், இப்போராளிகளின் நடவடிக்கைகள் இலங்கைக்குரிய பிரச்சினையாகும்; தமிழ்நாட்டுக்கு உரியது அல்ல.

இலங்கைப் போராளிகள் தாராளமாக தமிழகத்தில் நடமாடுகின்றனர் என்றும் அஸாம் தீவிரவாதிகளுடன் அவர்களுக்குத்தொடர்பு இருப்பதாகவும் குற்றஞ் சாட்டப்படுகிறது. இதற்காக தமிழக அரசை தேச விரோத சக்தியாக குற்றஞ்சாட்ட முடியுமா?

காலிஸ்தான், அஸாம் ஆகிய தனிநாட்டுக் கோரிக்கையை தமிழக அரசு முன் வைத்துள்ளதா?

—இப்படி 'இந்து' நாளிதழ் [illegible] தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதியை நோக்கி ஏவப்பட்ட 9 ஏவுகணைகள் நடுவானில் அழிப்பு

ரியாத், ஜன. 22

சவூதி அரேபியா மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏவப்பட்ட 'ஸ்கட்' ஏவுகணைகளில் ஒன்பதை பன்னாட்டுப் படைகளின் 'பேட்ரியட்' ஏவுகணைகள் நடுவானில் வைத்துச் சுட்டு வீழ்த்தின.

நான்கு ஸ்கட் ஏவுகணைகள் தலைநகர் ரியாத்தில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டன.

இரண்டு டஹ்ரான் படைத்தளத்தின் மேலாக வந்தபோது சுட்டு வீழ்த்தப்பட்டன.

மூன்று ஏவுகணைகள் பாலைவனப் பகுதியில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டன. ஒரு ஸ்கட் ஏவுகணை நீரில் விழுந்தது.

ஈராக்கின் தென்பகுதியில் உள்ள பாலைவனப்பகுதியில் இருந்தே ஸ்கட் ஏவுகணைகளை ஈராக்படைகள் ஏவியதாகச் சொல்லப்பட்டது.

சவூதி அரேபியாவில் இருந்து 300 மைல் தொலைவில் இப்பகுதி உள்ளது.

## பிரெஞ்சுப்படைகள் ஈராக் மண்ணிலும் போரிடும்

வளைகுடா போரில் ஈராக் மண்ணிலும் பிரெஞ்சுப் படைகள் போரிடும் என்று பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்ட் தெரிவித்தார்.

ஈராக் மண்ணில் பிரெஞ்சுப்படைகள் போரிடாது என்று தனது பாதுகாப்பு அமைச்சர் கூறிய கருத்துக் தவறானது என்றும் ஜனாதிபதி மித்தரண்ட் சொன்னார்.

குவைத் மண்ணில் நிலை கொண்டுள்ள ஈராக் படைகளுக்கு எதிராக மட்டுமே பிரெஞ்சுப் படைகள் போரிடும் என்று பிரெஞ்சுப் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார்.

## போர் நீடிக்கக் கூடாது என்கிறார் மித்தரண்ட்

வளைகுடாப் போர் மாதக் கணக்கில் நீடிக்கப்படக் கூடாது.

பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்ட் நேற்று முன்கண்டவாறு சொன்னார்.

போர் ஆரம்பித்த பின்னர் முதன்முறையாக ஜனாதி மித்தரண்ட் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டது இதுவே முதன்முறையாகும்.

வாரக் கணக்கில் போர் நடைபெற்று முடிவடைந்து விடும் என்று நம்புவதாகவும் அவர் சொன்னார்.

போரின் இலக்கு குவைத்தை விடுதலை பெறச் செய்வதாக இருக்க வேண்டுமே அல்லாது, ஜனாதிபதி சதாம் ஹுசேனைக் கொல்வதாக இருக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி மித்தரண்ட் சொன்னார்.

## தனது படைப் பலத்தை ஈராக் முழு அளவில் பிரயோகிக்கவில்லை

பன்னாட்டுப் படைகளுக்கு எதிராக எமது படைப் பலம் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

ஈராக ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்று பக்தாத் டெலிவிஷனில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

எமது படைப்பலத்தில் சிறிய அளவுதான் பன்னாட்டுப் படைகளுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. விரைவில் முழுப் பலத்தைப் பிரயோகிப்போம். அப்போது தான் போரின் உண்மை நிலை தெரியவரும் என்றும் ஜனாதிபதி சதாம் ஹுசேன் சொன்னார்.

## ஈராக்கிற்கு எப்படியும் தண்டனை கிடைக்கும் என்கிறது இஸ்ரவேல்

டெல் அவிவ், ஜன 22

ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதற்கான தண்டனையை ஈராக்குக்கு இஸ்ரவேல் என்றோ ஒரு நாள் கொடுத்தே தீரும்.

இஸ்ரவேலிய பிரதமர் யிற்ஷாக் ஷாமிர் நேற்று நாட்டு மக்களுக்கு டெலிவிஷனில் பேசுகையில் முன்கண்டவாறு சொன்னார். பதிலுக்கு பதில் என்ற விதத்தில் உடனே ஈராக் மீது இஸ்ரவேல் தாக்குதல் நடத்தாது என்றும் அவர் சொன்னார்.

## புஷ்ஷுக்கு ஆதரவு அதிகரிப்பு

வாஷிங்டன், ஜன 22

வளைகுடா போர் ஆரம்பித்த பின்னர் அமெரிக்க மக்கள் மத்தியில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு ஆதரவு அதிகரித்து இருப்பதாக கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

கொலம்பியா ஒலிபரப்புச் சேவை 'நியூயோர்க் டைம்ஸ்' நாளிதழின் ஆதரவுடன் நடத்திய கருத்துக் கணிப்பில் 100 க்கு 84 பேர் திரு புஷ்ஷின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

## தாய்லாந்தில் பதற்றம்

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஆயுதங்களுடன் பலஸ்தீனக் கெரில்லாக்கள் தாய்லாந்துக்குள் பிரவேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பாங்கொக்கில் உள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் அவுஸ்திரேலிய தூதரகங்களைச் சுற்றி நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை பாதுகாப்புப் பணியில் தாய்லாந்து அரசு ஈடுபடுத்தியுள்ளது.

பாங்கொக்கில் இருந்து செல்லும் விமானப்பயணங்களையும் சில சர்வதேச விமான சேவை நிறுவனங்கள் ரத்துச் செய்துவிட்டன.

## ஆர்ப்பாட்டம் தொடர்கிறது

வெள்ளை மாளிகை முன்னால் வளைகுடாப் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நேற்றும் இடம்பெற்றது. அமெரிக்க நகரங்களான சான்பிரான்ஸிஸ்கோ, கலிபோர்னியாவிலும் சமாதானப் பேரணிகள் நடத்தப்பட்டன.

அதே சமயம் ஈராக்கில் உள்ள கர்பலா போன்ற புனித பிரதேசங்கள் மீது பன்னாட்டுப் படைகளின் போர் விமானங்கள் உக்கிரமான குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின என்று பாக்தாத் வானொலி குற்றஞ்சாட்டியது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கிலம் (Stencils) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகிறது. Fudo, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக) [சி/5664]

### 1990 (O/L) கணிதம்

1990இல் நடைபெற்ற O/L கணிதப் பரீட்சை வினாத்தாள்களும், விடைகளும் வேறு பயிற்சிகளும் அடங்கிய ஆசிரியர் சச்சிதானந்தனின் மயூரி வெளியீடுகள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரேசனரீஸ், சுன்னாகம். (14918)

### PERSONAL CLASSES

ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரையான பிரத்தியேக ஆங்கில வகுப்புகளும், 1ஆம், 2ஆம், 3ஆம் 4ஆம் தர கர்நாடக சங்கீத - சாஸ்திர (Theory) - வகுப்புகளுக்கும் 1/1 நக்கா வீதி, நல்லூர் என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். (15564)

### மில்க்வைற் திரவ சவர்க்காரம்

வீட்டுச் சலவைக்குச் சிறந்தது அழுக்கை அகற்றும் தனிச் சக்தி வாய்ந்தது போத்தல் ரூ. 90/ மட்டுமே மொத்தமாகவாங்குவோருக்கு விசேட கழிவு. இணுவில், திருநெல்வேலி, யாழ் நவீன சந்தை, அண்ணாகோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மலக்கவற, யாழ்ப்பாணம். (சி/5672)

### விற்பனைக்கு

National RX C45 கசட் ரேடியோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- Technico 144, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். [15567]

### தேவை

வாஷிங் மெஷின், குளிர்சாதனப்பெட்டி பழுது பார்ப்பதில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ள ஒருவர் தேவை. தகுதியுடையவர்கள் உடனடியாக செப்ரி எலெக்ரோனிக்ஸ், மானிப்பாய் வீதி, கைதடிச் சந்தி, கைதடி என்னும் முகவரியுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். [15574]

### கல்வி

கல்யாணி ஆங்கில கல்வி நிலையம் 804 மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். 1ம் வகுப்பு ஆங்கில பயிற்சிகள் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு வகுப்புகள் தனிப்பட்டவர்களுக்கான பயிற்சி (Individual-tuition) உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் (House Visits). பயிற்சிகள் அனைத்தும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும். (15563)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

ஏழு வாரங்கள் நிரம்பிய பால் மறந்த பூச்சியகற்றிய அழகிய வெள்ளை பொமேரியன் ஆண் நாய்க்குட்டிகள் இரண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: கு. ராஜ்குமார் மாவடிச்சந்திக்கு அண்மையில், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. [15561]

# இந்தியாவின் போக்கு தமிழர் அழிவை ஊக்குவிப்பதாக அமையக் கூடாது

## முன்னாள் வெளியுறவுச் செயலர் வெங்கடேஸ்வரன் கூறுகிறார்

புதுடில்லி, ஜன 22

இந்தியாவின் போக்கு மழுத்தனமான, அமைதியான போக்கு தமிழர்கள் அழித்தொழிக்கப்படுவதை ஊக்குவிப்பதாக அமைதல் கூடாது.

இவ்வாறு இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச்செயலர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் கூறியுள்ளார்.

'வேர்ல்ட் வோச்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் தெரிவித்ததாவது:

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்காதவரையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு எதுவும் கிடையாது.

தெற்கில் ஜே.வி.பியை ஒழித்தது போலவே வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் இயக்கத்தை அழிப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது.

இலங்கை அரசு ஜே.வி.பியினரை அழிப்பதற்கு செலுத்திய விலை மிகவும் அதிகமானதாகும். அரசின் கணிப்பீட்டின்படி ஜே.வி.பியில் 4ஆயிரம் பேர் வரையே இருந்தனர் என்று கூறப்படுகிறது. ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்துக்கும் அதிகம் எனக் கூறப்படுகிறது.

அதாவது ஒவ்வொரு ஜே.வி.பி. நபருக்கும் 10 அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால் விடுதலைப் புலிகள் போன்ற தமிழ் அமைப்புக்களை ஜே.வி.பியுடன் ஒப்பிடுவது யதார்த்தபூர்வமானதல்ல. புலிகளுடன் ஜே.வி.பியினருக்கான அணுகுமுறைகளை கைக்கொள்வதும் சாத்தியமானதல்ல.

கடந்த ஏழு மாதங்களாகத் தொடர்ந்து வரும் யுத்தம் மேலும் தொடருமாயின் தீவு பிளவுபடுவதே விளைவாக அமையலாம்.

புத்தி சாதுர்யம் மிக்க தலைமைப் பீடத்தினர் இந்த உண்மையை மனதில் கொண்டு காலம் தாழ்த்தாது பரஸ்பர நம்பிக்கையை கட்டி எழுப்புவதற்கான முயற்சியைத் தொடக்க வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் வெற்றியடைய இருப்பினும் கூட தமிழர்கள் இனரீதியில் புறக்கணிக்கப்படாமல் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு.

இந்தியாவினது கோழைத்தனமான, அமைதியான போக்கு தமிழர்கள் அழித்தொழிக்கப்படுவதை ஊக்குவிப்பதாக அமையக்கூடாது.

இவ்வாறு அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார். [இ-5]

## புளியங்கூடலில் சைக்கிள் திருட்டு

புளியங்கூடல், ஜன 22

சமீப நாட்களில் புளியங்கூடல் சந்திப் பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்ட சைக்கிள்கள் காணாமல் போய்விட்டன.

திருட்டைத் தடுக்கும் முகமாக புளியங்கூடல் சந்தி வர்த்தகர் சங்கத்தினரால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. [இ-125]

## காக்கைதீவு, கல்லுண்டாய் பகுதிகளில் கட்டாக்காலிகள்

நல்லூர், ஜன. 22

ஆனைக்கோட்டை, கல்லுண்டாய், காக்கைதீவு பகுதிகளில் கட்டாக்காலியாக திரியும் ஆடு, மாடுகளுக்கு குற்றப்பணம் அறவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி ஆனைக்கோட்டை விவசாய உற்பத்திக் குழுத் தலைவர் திரு. வெ. . . . மூலம் விடுத்த அறிவித்தலில், இப் பகுதிகளில் உள்ள கட்டாக்காலி கால்நடைகள் நெற்பயிர்களையும், சிறு பயிர் வகைகளையும் அழித்து வருவதாகவும் இவற்றைக் கட்டி வைத்து வளர்க்குமாறும், மீறி வீதிகளில் திரியும் கட்டாக்காலி கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-100]

## திரிபோஷா பொதிகள் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 22

கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய 89 திரிபோஷா பொதிகள் சுகாதாரத் திணைக்கள மருந்துகளஞ்சியத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இது பற்றி சம்பந்தப்பட்ட வட்டாரங்களிடம் கேட்ட போது: யாழ் கிளிநொச்சி போக்குவரத்துச் சிக்கலே இதற்குக் காரணம் என்றும் இதனை கிளிநொச்சிக்கு கொண்டு செல்ல செஞ்சிலுவைச் சங்கம் உறுதி அளித்திருந்ததாகவும், ஆனால் இதுவரை எடுத்துச் செல்லப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

## மன்னார் தபால் 5 நாளுக்கு ஒரு தடவை கொழும்புக்கு

மன்னார் மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் இருந்து 5 நாட்களுக்கு ஒரு தடவை தபாற்பொதிகள் கொழும்புக்கு கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன. அதே போன்று 5 நாட்களுக்கு ஒரு தடவை கொழும்பிலிருந்து தபாற்பொதிகள் மன்னாருக்கு அனுப்பப்படுகின்றன.

ஜனவரி மாத முதல் வாரத்திலிருந்து இந்த புதிய நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது

மன்னாரில் உள்ள 6 தபாற்கந்தோர்களிலும், 38 உப தபாற் கந்தோர்களிலும் 'மணிஓடர்'களும் மாற்றப்படுகின்றன. [இ-6]

## பாடசாலை தரிசு நிலங்களில் உப உணவு பயிர்ச்செய்கை

யாழ்ப்பாணம், ஜன 22

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் மூன்றாம் சுற்றாக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த நடவடிக்கைகளை மேற்பார்வையிட விவசாய கல்வி அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாணவர்களைக் கொண்டு உப உணவுகளைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (இ-5)


## MODERN EDUCATION CENTRE
KARAVEDDY.

A/L 92 புதிய பிரிவு ஆரம்பம்:
27-1-91 பிற்பகல் 3 மணி

| | |
|---|---|
| பொருளியல்: | — திரு. லோகசிங்கம் |
| வர்த்தகம்: | — திரு விக்னேஸ்வரன் |
| கணக்கியல்: | — திரு சரவணபவான் |
| இந்துநாகரிகம்: | — திரு ஜோதீஸ்வரன் |
| | — திரு யோகராஜா |
| தமிழ்: | — திரு. கோகராஜா |
| புவியியல்; | — திரு. கிருஸ்ணராஜா |
| அரசியல்: | — திரு. மாதகலண்ணு |

ஆண்டு: 9, 8 7, 6, 5 4
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
2-2-91 காலை 7 மணி

ஆண்டு 5க்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான விசேட வகுப்பும், ஆண்டு 6 பிரவேசப் பரீட்சைக்கான விசேட வகுப்பும் நடைபெறுகின்றன. [15566]


## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. ஆர்தர் தவராஜா ஜெயரட்ணம்

தோற்றம்: 08 — 07 — 1917
மறைவு: 22 — 01 — 1990

வாழ்வில் நீதி, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து, எமக்கு வழிகாட்டிய எமது அன்புத் தந்தை மறைந்து ஓராண்டு சென்றாலும், நாம் என்றும் அவரை அன்புடன் நினைவு கூர்வோம்.

அவரின் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

21/2, கச்சேரி மோட்டை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [15571]

## ஓராண்டு நினைவஞ்சலி



உதிப்பு: 06-03-1954
உதிர்வு: 02-02-1990
திதி: 22 - 01 - 1991

அமரர் திருமதி டில்லபவர் பரமேஸ்வரன்

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்:
கணவன், பிள்ளைகள்.

டச்சு வீதி,
உடுவில், சுன்னாகம். [15575]

## பிறந்த நாள் நினைவு



தோற்றம்: 22 — 01 — 1953
மறைவு: 14 — 02 — 1987

வேலுப்பிள்ளை சிவனேந்திரன் (ரஞ்சன்)

எங்கள் மண் யாழ்ப்பாணத்து
எழிலார்ந்த கல்லட்டி ஊரில்
உள்ளங்கள் சேர்கின்ற உயரிய
தங்கத் தோற்ற உத்தமன் சிவனேந்திரா!
எங்கள் தாய் ஈந்து தந்த
எடுப்பான துடிப்பான வீரன்
வாழ்ந்தனை — வாழ்வை ஈய்ந்தனை
தாழாத் தமிழ்க்கு தன்னைத் தந்தமா வீரனல்றோ!

(சி/5675) -உறவினன்-

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 282/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-1-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org